நகல்

கும்பகோணம்
13-11-05

ஸகலகுண ஸம்பன்னர்களாயும் ஸத்ஸத்
குணமணிகளாயும் எங்கும் பிரஸித்தியடை
ந்து விளங்கிக்கொண்டிருக்கிற ஐயரவர்
களுக்கு அநேக ஸாஷ்டாங்க நமஸ்காரம்
உபயக்ஷேமோபரி

நெடுநாளாய்த் தங்களிடத்திலிருந்து
நேராய் க்ஷேம பத்திரிகை வராததினால்
மனோவேகம் சிறிது ஜாஸ்தியாய் வருகிறது
அருமையான தங்களுடைய ஸல்லாபத்தை
நெடுநாளிடைவிடாது அனுபவித்து ஆன
ந்தித்தவனாகையால் ஒவ்வொருநாளும்
அந்தகாலத்தின் ஞாபகம் மனதில் தோ
ன்றிக்கொண்டே இருக்கிறது. அவ்வி
டத்திலிருந்து என் மேல் வைத்திருக்கும்
அன்பைக் காட்டுதற்காகவே அடிக்க
டி தங்களுடைய புஸ்தகப் பதிப்புகளில்
ஒன்றை என்னுடைய அநாதரத்தையுங்
கொஞ்சமும் பாராட்டாமல் அனுப்பி
த்து வருகிறீர்கள். கடைசியாய்ப் பிள்ளை
யவர்களின் தியாகராஜலீலையை ம-ள-
ள. ஸ்ரீ ராமாநுஜாசாரியாரவர்கள் சே
ர்ப்பித்தார்கள். அதற்காக நான் தங்க
ளுக்கு வணக்கத்துடன் வந்தனம் செ
லுத்துவதைத் தயைகூர்ந்து அங்கீகரிக்க
க் கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீ-கல்
யாண ஐய்யர் - ஸ்ரீ - ஸுந்தரேசஐயர்
இவர்களுடைய க்ஷேமத்தைப்பற்றி எல்லா
ம் தெரிவிக்க வேணுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன். அவர்களின் குழந்தை
களின் க்ஷேமத்தையும் தெரிவிக்கக் கே
ட்டுக் கொள்ளுகிறேன்

ம-ள-ள-ஸ்ரீ-ம. ரங்காசாரியர்
அவர்களுக்கு பக்தியுடன் கூடிய என்
னுடைய நமஸ்காரத்தைச் சொல்லி
யருளக் கோருகிறேன்

வேறு விசேஷமில்லை. அநேக ஸாஷ்
டாங்க நமஸ்காரம் தங்கள் விதேயன்
கே-சுந்தரராமன்

20-11- கவர்ன்மெண்டில் ரூ 2000. புத்தக
ப்பதிப்பிற்காக உத்தரவு செய்திருப்பதாய்
ஸ்ரீ வாட்ட க்கேட்டதில் பெருந்திருப்தியாயிற்று.
தாங்கள் செய்திருக்கும் லோகோபகார
த்திற்காக தமிழ்த்தனக்கார் எவ்வள
வோ செய்ய கடன்பட்டிருக்கிறார்கள்
இக்காலத்தில் இவ்வளவாவது தமிழ்
ப்பாஷைக்கு அவர்கள் கடாக்ஷித்
தது மெச்சிக்கொள்ளத்தக்கது. துரை
த்தாரோ ஏனையரோ ஒருவருடைய
ஸ்திதியைச் சிறிதேனும் கவனிக்காமல்
பண்டைக்காலத்துப் பிரபுக்கள் போல்
தர்மத்துக்காக வெகுபாடுபட்டு உழை
த்துவரும் மகாபுருஷராகிய தங்களுக்
கு இது ஒரு விசேஷமாயிராது. ஆயி
னும் என் போல்வருக்கு உண்டாயி
ருக்கும் ஸந்துஷ்டியைத் தெரிவிக்கலா
னேன்

சுந்தரராமன்

நகல்

21.



13-11-05

கோவிந்தராமஐயர்

3202

Copied 199-202

P 199 - 202.

த. க. VOL 'M'

49